22nd September 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A Paper [a] is placed on the table of the House.

SRIMATHI HEMALATHA DEVI : தலைவர் அவர்களே, மேஜையின் மீது வைத்துள்ள தாளில் இடங்கள் குறிப்பிடாததால் இந்த விதைப் பண்ணை ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை ஏக்கர் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதன் விவரம் கனம் அங்கத்தினருக்குக் கொடுக்கப்பட்டுள்ள காகிதத்தில் இருக்கிறது. மொத்தம் 3,371 ஏக்கர் 41 செண்டுக்கு விதைப்பண்ணை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

SRI J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லாவிற்கு மிகவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை அதிகரிப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் மற்ற ஜில்லாக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சிறிய ஜில்லாவாக இருக்கும் நீலகிரி ஜில்லாவிற்கு குறைவாக இல்லை என்பது தெரியும்.

SRI R. SRINIVASA IYER : அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நில விஸ்தீரணங்கள் எல்லாம் சர்க்காருக்கு அக்வையர் செய்யப்பட்டதா ? அல்லது குத்தகை விடப்பட்டதும், சொந்தமாக இருப்பதும் சேர்ந்து குறிப்பிடப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டும் சேர்ந்துதான்.

SRI S. M. ANNAMALAI : மேஜையின் பேரில் வைக்கப்பட்டிருக்கிற 3,371 ஏக்கர் 41 செண்ட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்தெந்த விதை பொருள்கள் விளைவிக்கப்பட்டு வருகின்றன. அதன் சராசரி விளைவு எவ்வளவு என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு வேறு விதைப் பொருள்கள் விளைவிக்கப்பட்டு வருகிறது. வேறு தகவல் என்னிடம் இல்லை.

SRIMATHI HEMALATHA DEVI : இந்த விதைப் பண்ணையில் நெல் மட்டும் பயிரிடப்படுகிறதா ? பயிறு வகை போன்ற மற்ற எல்லா விதைப்பொருள்களும் பயிரிடப்படுகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்னமே சொன்னேன் வேறு வேறு விதைப்பொருள்கள் பயிரிடப்படுகின்றன என்று. நஞ்சை புஞ்சை பயிர்களுக்கெல்லாம் விதைப் பண்ணைகள் இருக்கின்றன.

Bus transport (Madras-Kancheepuram route)

* 1694 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the present stage of the proposal to nationalise the bus route from Madras to Kancheepuram; and

(*b*) the reasons for the delay?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government have as a policy decided to operate only long distance routes and hence it is not proposed to take up the short route, Madras–Kancheepuram

(*b*) Does not arise.

---

a Printed as Appendix I on page 504 infra.

[22nd September 1961

SRI M. KALYANASUNDARAM : காஞ்சிபுரம் ரூட்டை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மூன்று வருஷத்திற்கு முன்னமே முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் உத்திரவும் பிறப்பிக்கப் பட்டது. அப்படி இருந்தும் அதைக் கைவிட்டதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த முடிவு எடுக்கப்பட்ட பிறகு மீண்டும் கொள்கையைப் பரிசீலனை செய்த காலத்தில் 120 மைல்களுக்குள் உள்ள ரூட்டுகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இது கைவிடப்பட்டது.

SRI M. KALYANASUNDARAM : அப்படியானால் காஞ்சீபுரம் வரை நடத்தப்படும் அரசாங்க பஸ் போக்குவரத்து கைவிடப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : எடுக்கவேண்டியதுதான்.

Steel rolling mill

* 1695 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN:
SRI N. K. PALANISAMI : } கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் Steel Rolling Mills ஆரம்பிக்கும் ஏற்பாடு எந்த நிலையிலுள்ளது ?

(இ) அது எங்கே ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) It is presumed that the hon. Member refers to the proposal to establish a steel re-rolling mill in the public sector. Action is being taken to prepare a project report and to obtain a licence from the Government of India under the Industries (Development and Regulation) Act, 1951 for the establishment of the steel re-rolling mill.

(*b*) The precise location of the mill has not been decided yet.

SRI V. K. KOTHANDARAMAN : அரக்கோணத்தில் கட்டட வசதிகளும் மற்ற வசதிகளும் இருப்பதனால், அங்கே ஆரம்பித்து நடத்து வதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த இடத்தில் செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்படவில்லை. அரக்கோணத்தில் நல்ல வசதிகள் இருந்தால் அதுவும் கவனிக்கப்படும்.

SRI R. SRINIVASA IYER : புதிதாக சில ஸ்டீல் ரோலிங் மில் வைக்கப்போகிறார்கள் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது நாகப்பட்டி ணத்தில் இருக்கக்கூடிய ஸ்டீல் ரோல்லிங் மில்லின் கபாசிடியை இரண்டு பங்காக உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லப்பட்டது. அதை இந்த மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து செய்ய உடனடியான நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாகப்பட்டிணத்தில் இருப்பது பிரைவேட் செக்டார். இப்பொழுது மொத்தம் லைட் ஸ்டரக்சுரல் ஆங்கில் பார் ராட் முதலியவை 1,11,450 டன் தேவை என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. பப்ளிக் செக்டாரில் 20,000 டன் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு ஸ்டீல் ரோலிங் மில் ஏற்படுத்த ஒரு கோடி ரூபாய் செல வாகும். பிரைவேட் செக்டாரில்கூட சில பேர்கள் மனு போட்டிருக் கிறார்கள். இதை அரசாங்கம் கவனித்து வருகிறது.